# கற்பகம் KATPAKAM திங்கள் இதழ்

விலை ரூபா 10/-

மலர்-05 பெப்ரவரி-2012 இதழ்-52


## குறளமுதம்-52

வள்ளுவர் வாய்மொழியை எத்திறத்தாரும் எளிதில் பொருளுணர்ந்து படிப்பதற்கு ஏதுவாக "கற்பகம்" தொடர்ந்து குறளமுதைத் தரும்.

**அதிகாரம்-6-அறத்துப்பால்-வாழ்க்கைத்துணை**

மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித்து ஆயினும் இல்

இல்வாழ்க்கைக்கு ஏற்ற நற்குண நற்செயல்கள் மனைவியிடம் இல்லையானால், ஒருவனுடைய வாழ்க்கை வேறு எவ்வளவு சிறந்ததாயினும் சிறப்புடையதாகாது

## பண்டத்தரிப்பு பனை தென்னை வள அ.கூ.சங்கத்தின்

# உப உணவு உற்பத்திக்கு யூ.என்.டி.பி. நிதியுதவி!

பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் உபஉணவு உற்பத்தி செயற்பாடுகளை மேலும் ஊக்குவிக்கும் முகமாக யூ.என்.டி.பி. நிறுவனம் உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும் செயற்றிட்டத்தின் கீழ் 2 கோடியே 17 இலட்சம் ரூபாவை இச்சங்கத்திற்கு வழங்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சங்கம் 2010ம் ஆண்டு முதல் உபஉணவு உற்பத்தியில் கூடுதலான கவனம் செலுத்தி பனைசார் உபஉணவு பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்து வருகின்றது.

அரசாங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற மாவட்ட மட்ட, மாகாண மட்ட, தேசிய மட்ட கண்காட்சிகளில் இச்சங்கத்தின் பனைசார் உப உணவு உற்பத்திப்பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டு பலரது பாராட்டுதல்களைப் பெற்றது மட்டுமன்றி, இது தொடர்பாக நடைபெற்ற அரச அதிபர்கள் மாநாட்டிலும் இச்சங்கம் பாராட்டுதலைப் பெற்றதுடன் அங்கு கலந்து கொண்ட மாவட்ட அரச அதிபர்களுக்கு சங்க உற்பத்திப் பொருட்களான பனாட்டு, பாணிப் பனாட்டு, புழுக்கொடியல், ஒடியல் மா, பனை வெல்லம் அடங்கிய பொதிகளை வழங்கியும் இருந்தது.

இவ்வாறான செயற்பாடுகளைத் தொடர்ந்தும், யாழ்.கூ.அ.உ. ஆணையாளர் திரு வீ.கே.அருந்தவநாதன் அவர்களின் சிபார்சுக்கு அமையவுமே யூ.என்.டி.பி நிறுவனம் இந்நிதியுதவியை வழங்க முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சமாசத்தில் இதுவரை 421 பேர் மாதாந்த ஓய்வூதியம் பெற்றனர்

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின சமாசம் தனது அங்கத்துவ சங்கங்களின் உறுப்பினர்களுக்கு மாதாந்தம் சுமார் 4 இலட்சம் ரூபாவை மாதாந்த ஓய்வூதியமாக வழங்கி வருகிறது.

கடந்த தை மாதம் 421 ஓய்வுபெற்ற அங்கத்தவர்களுக்கு 3 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாவை ஓய்வூதியமாக வழங்கியது.

2006ம் ஆண்டு தொடக்கம் சமாசத்தினால் செயற்படுத்தப்பட்டுவரும் அங்கத்தவர் விபத்து ஓய்வூதிய நிதித் திட்டத்தின்மூலமே இப்பண உதவி வழங்கப்படுகின்றது.

அங்கத்துவ சங்கங்களின் ஓய்வுபெற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையும் அவர்களுக்கான ஓய்வுநிதி தொடர்பான விபரமும் வருமாறு.

சுன்னாகம் சங்கத்தைச் சேர்ந்த 37 உறுப்பினர்களுக்கு 29,693 ரூபாவும்,

(8ம் பக்கம் பார்க்க)

## பாராட்டும் கௌரவிப்பும்!



யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க ஓய்வுபெற்ற உறுப்பினர்கள், பணியாளர்கள் ஆகியோரின் பாராட்டுவிழாவும் கௌரவிப்பு விழாவும் சங்கக் காரியாலய மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு செ.நடராசா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. வீ,கே.அருந்தவநாதன் பிரதம விருந்தினராகவும், மாவட்ட

(8ம் பக்கம் பார்க்க)

"கணக்கிலா பயன்தரு கற்பகதருபோல் கற்பகமும் பயன் தரும்"

**சிந்தனைத்துளி**

"தனி மனிதர்களின் நிலை உயர்த்தப்பட்டால் தேசமும், அதன் நிறுவனங்களும் உயர்வடைந்தே தீரும்"

-விவேகானந்தர்-

## கற்பகக்கரு

### பனை வளத்தை பயன்படுத்துவோம்!

நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் அந்நாட்டின் மூலவளங்கள் பெரிதும் உறுதுணையாக இருக்கின்றன. மூலவளங்கள் என்று குறிப்பிடும்பொழுது எமது முன்னோர் வாழ்ந்த பாரம்பரிய மண்ணில் இயற்கையாகவே பனை மரங்கள் தோற்றம் பெற்றிருந்தன.

இப் பனை மரங்களிலிருந்து பெறப்படும் மூலப்பொருட்களில் எத்தனையோ வகையான பயன்பாட்டு பொருட்களை உற்பத்தி செய்யக்கூடியதாக உள்ளது. தால சாஸ்திரம் என்ற நூல் 801 பயன்கள் பெறக்கூடிய உற்பத்திகளை செய்யலாமென்று கூறுகின்றது.

பராமரிப்புச் செலவுகள் அற்ற இப் பனைமரத்தை நல்ல முறையில் பேணி பாதுகாத்து அவற்றிலிருந்து பெறக்கூடிய சகல வளங்களையும் பெற்றுக்கொள்வதில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் முழு வீச்சில் ஈடுபடவேண்டும்.

ஆனால் யாழ்.மாவட்டத்திலுள்ள 19 பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் எத்தனை சங்கங்கள் இதில் ஈடுபட்டு வருகின்றன என்பதை ஆராய்ந்தறிய வேண்டும். உண்மையில் பண்டத்தரிப்பு, சாவகச்சேரி, மானிப்பாய், கோண்டாவில், தெல்லிப்பளை, சுன்னாகம், அச்சுவேலி, வேலணை ஆகிய பனைவளச் சங்கங்கள் சமாசத்திலிருந்து நிதியுதவி மானியமாகப் பெற்று பனைவெல்லம், தும்பு உற்பத்தி என்பவற்றில் ஈடுபட்டு, அங்கத்தவர்களுக்கும் அவர்சார்ந்தோருக்கும் வேலை வாய்ப்புக்களை வழங்கி அவர்களது வாழ்வாதாரத்துக்கு துணையாக இருப்பது பாராட்டுக்குரிய விடயமாகும்.

இச்சங்கங்களைவிட ஏனைய பனை வளச் சங்கங்களும் தங்களது அங்கத்தவர்களதும் அவர்களைச் சார்ந்தவர்களதும் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு ஏற்ப பருவ காலங்களில் பனையிலிருந்து பெறக்கூடிய அத்தனை வளங்களையும் பயன்படுத்தி உற்பத்தியில் ஈடுபட வேண்டும்.

குறிப்பிட்டு சொல்வதானால் பண்டத்தரிப்பு பனைவளச் சங்கத்தின் பனம்பொருள் உற்பத்தியின் முன்மாதிரியான செயற்பாட்டை தேசிய ரீதியில் அறிமுகப்படுத்தியதன் பெறுபேறாக அரச சார்பற்ற நிறுவனமான யூ.என்.டி.பி. நிறுவனத்தின் மூலம் பெருமளவான நிதியுதவியை பெற்றுள்ளமையை இங்கு சுட்டிக்காட்டுகிறோம்.

இத்தகைய நிதியுதவிகள் ஏனைய பனை வளச் சங்கங்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதே கற்பகத்தின் தலையாய நோக்கமாகவுள்ளது.

இந்நிலையில் பனை வளச் சங்கங்களின் நிர்வாகிகளும் முகாமை மட்ட பணியாளர்களும் ஒன்றிணைந்து தத்தம் சங்கங்களின் எதிர்கால வளர்ச்சி கருதி பனை வளத்திலிருந்து பெறக்கூடிய அத்தனை உற்பத்திப் பொருட்களையும் பெற்றுக்கொள்வதற்குரிய நடவடிக்கைகளில் காலம் தாழ்த்தாது ஈடுபட வேண்டுமென கற்பகம் கேட்டுக்கொள்கிறது.

"அங்கத்தவர்களின் ஆதரவே கற்பகத்தின் பலம்"

-ஆசிரியர்-

## வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

### அங்கத்தவர், பணியாளர்களுக்கான சமூக பாதுகாப்பு நலத்திட்ட நடைமுறைவிதி 6

(முன்னையதிலிருந்து திருத்தம் செய்யப்பட்டு கூ.அ.உ. ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்டது)

9.3.4 நடைமுறை விதி 9.3இல் கூறப்பட்ட விடயம் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட மருத்துவரின் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இக்கொடுப்பனவுகள் யாவும் நடைமுறைவிதி 5.2இல் தெரிவிக்கப்பட்ட விதிமுறைகளுக்கு அமைவாக வழங்கப்படும்.

**10. பனை வெல்ல உற்பத்தி ஊக்குவிப்பு நிதி வழங்கல்**

அங்கத்துவ சங்கங்களால் வருடாந்தம் மேற்கொள்ளப்பட்டு வரும் பனை வெல்ல உற்பத்திகளை மேலும் அதிகரிக்க, உற்பத்தி செய்து விற்பனை செய்யும் 1 கிலோகிராம் வெல்லத்திற்கு ரூபா 50.00 வெல்ல ஊக்குவிப்பு நிதி வழங்கல்.

10.1 பனம் உப உணவு உற்பத்தி, பனை தென்னை சார் உற்பத்திப் பொருட்களை ஊக்குவித்தல் தொடர்பான செயற்பாட்டினை மேற்கொள்ளல்.

10.2 நடைமுறைவிதி 5.2இல் கூறப்பட்ட விடயங்களை கவனத்தில் கொண்டு கொடுப்பனவை வழங்கல்.

**11. சித்த மருத்துவ சேவைக்கு நிதி உதவி புரிதல் (வருடத்தில் ஒரு தடவை)**

11.01 பனை தென்னை வள நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட சித்த மருந்துகள் உற்பத்தி விற்பனவு வைத்தியசேவைக் கூட்டுறவுச் சங்கத்தினால் அங்கத்துவ சங்கங்களின் எல்லைப் பரப்பினுள் நடத்தப்பட்டுவரும் சித்த மருந்து வழங்கல் திட்டத்திற்கு ஆகக்கூடிய நிதி உதவியாக ரூபா 5,000.00 வழங்கல்.

11.02 சித்த மருந்துகள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கத்தால் நடத்தப்படும் நடமாடும் சேவையின்போது ஏற்படும் செலவில் அரைப்பங்கு இத்திட்ட நிதியின்மூலம் சங்கங்களுக்கு வழங்கப்படும். இதன் உச்சத்தொகை ரூபா 5,000.00றக்கு மேற்படலாகாது.

11.03 சங்கங்களிலிருந்து சரியான தகவல்களை சமாசம் பெற்று அவற்றினை சமூக அபிவிருத்திக் குழுவின் சிபார்சுடன் சமாச நெறியாளர் சபையில் ஆராய்ந்து நிதியின் அளவு தீர்மானித்து கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் அனுமதி பெற்று வழங்கப்படும்.

**12. கூட்டுறவாளர் நலத்திட்டங்கள்**

**12.01 சர்வதேச கூட்டுறவுதின விழா**

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துடன் இணைந்துள்ள அனைத்து கூட்டுறவு நிறுவனங்களையும் ஒன்றிணைத்து வருடம்தோறும் சர்வதேச கூட்டுறவுதின விழாவினை நடத்துதல். இதற்காக பல போட்டிகளை எழுச்சியுடன் நடத்தி வெற்றி பெற்றவர்களுக்கு அன்றைய தினம் பரிசில்கள் வழங்கி கௌரவிப்பதால் கூட்டுறவாளர்களை கூட்டுறவில் பற்றுள்ளவர்களாக்குவதோடு, கூட்டுறவின் சிறப்பை வெளிக்கொண்டு வருதல்.

12.02 போட்டிகளை சங்க மட்டம், கொத்தணி மட்டம், சமாச மட்டம் என வகுத்து நடத்துதல்.

12.03 சர்வதேச கூட்டுறவுதின விழா நிகழ்வுகளை சிறப்பாக நடாத்துவது தொடர்பில் சமாச மட்டத்தில் 10 பேர் கொண்ட விழாக் குழு தெரிவுசெய்யப்பட்டு அவர்களே இவ்விழா தொடர்பான ஏற்பாடுகளை சமாசத்துடன் இணைந்து மேற்கொள்ளல் வேண்டும். இவ் விழாச் செலவுகளுக்கு ரூபா 150,000.00 வரை செலவு செய்யலாம்.

**13. கூட்டுறவுக் கல்விச் சுற்றுலா ஏற்பாடு செய்தல்.**

13.01 அங்கத்துவ நிறுவனங்களின் அங்கத்தவர், பணியாளர்களுக்கு கூட்டுறவு சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கமாகவும், கூட்டுறவில் நவீன தொழில்நுட்பத்தை புகுத்தவும், பொது உலக அறிவுடையவர்களாக்குவதற்கும் தேசிய ரீதியில் நாம் அனைவரும் கூட்டுறவாளர்கள் என்ற ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்காகவும் அனைவரையும் கல்விச் சுற்றுலாவில் பங்குபெறச் செய்யும் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக சுழற்சி முறையில் உள்ளூர். வெளியூர் சுற்றுலாவிற்கு அழைத்துச் செல்லல். இச்சுற்றுலாவிற்கு ரூபா 200,000.00 வரை செலவு செய்யலாம். [வளரும்]

# 4 பதநீர்

வடக்கு கிழக்கு தால மூலவள அபி விருத்தி நிறுவனத்தின் "பனைச் செல்வம்" என்னும் நூலிலிருந்து...

## பனிக்கட்டிமூலம் பாதுகாத்தல்

இறக்கிய புத்தம்புது பதநீரை வாயகன்ற கொள்கலன்களில் சேகரித்துக் கொண்டு அதன் நடுவில் பனிக்கட்டி நிரப் பப்பட்ட தகரக்குழாயினை வைக்க வேண்டும். இதனால் மெது மெதுவாக பதநீர் குளிர்ச்சியடைந்து 5−6 மணித்தி யாலங்கள்வரை புளிப்படையாது பாதுகாக் கப்படுகின்றது.

## குளிரூட்டிமூலம் பாதுகாத்தல்

குளிர்சாதனப்பெட்டிமூலம் 40 பர னைட் பாகை குளிர்நிலையில் இருக்கக் கூடியதாகப் பெட்டியின் கருவிகளை அமைத்துவிட்டு பதநீரை இக் குளிர் சாதனப் பெட்டிக்கு மாற்றுவதன்மூலம் சுவை, மணம் மாறாது பாதுகாக்கப்படு கிறது. ஆனால் இது செலவு கூடிய ஓர் வழிமுறையாகும்.

## திடீர் குளிர்விப்பு முறை மூலம் பாதுகாத்தல்

திடீர் குளிர்விப்பு முறை மூலம் பதநீரை உயரமான இடத்திலுள்ள தொட் டிகளில் ஊற்றி 25 அடி நீளமுடைய செப் புக்குழாயினை சுருளாக வளைத்து உப் பும், பனிக்கட்டியும் நிரம்பிய பெட்டிக்குள் செப்புச்சுருளை அமிழ்த்திக் குளிர வைக்கவேண்டும். இந்நிலையில் செப்புக் குழாய் குளிர்வடைந்து தயார் நிலையில் இருக்கும். தொட்டிகளிலிருக்கும் பதநீர் இக்குழாய்களுக்கூடாக செலுத்தப்படும் போது குளிரூட்டப் பட்ட செப்புக் குழாய் களுக்கூடாக பதநீர் வரும்போது குளிர்ச் சியடைந்து, வெளியேறும் பகு திக்கூடாக குளிர்ந்த பதநீர் வெளியேறும். மின்சாரம் இல்லாத இடங்களில் பதநீரை குளிர்விக்க இது ஓர் சிறந்த முறை யாகும்.

## கொதிக்கவைத்து குளிர்வித்தல்

கொதிக்கவைத்து குளிர வைத் தல் என்பது, பதநீர் நிரப்பப்பட்ட பாத்திரத் தினைத் தண்ணீர் தொட்டிக்குள் வைத் து சூடேற்றுவதன்மூலம் பதநீரை வெப்ப நிலை 190−195 பாகை பரனைட்டுக்கு கொண்டு வந்து திடீரென அவ் வெப்ப நிலையிலிருந்து 44 பாகை பரனைட் டுக்கு குளிரவைத்து பாதுகாக்கும் முறைக்கு "பாஸ்டிரைசேஷன்" என்று பெயர். கொதிக்க வைத்து திடீரெனக் குளிரவைக்கும் இம்முறையால் சுவை யும், மணமும் சிறிது மாறுபட்டாலும் இம்முறைமூலம் பதநீரை போத்தல்களில் காற்றுப்புகாது அடைத்துப் பதப்படுத்தி ஒருவாரம் வரை பழுதாகாமல் பாதுகாத் துக்கொள்ளலாம்.

## பதநீரை பனிக்கட்டியாக மாற்றி பாதுகாத்தல்

பதநீரை பனிக்கட்டியாக மாற் றுதல் (Ice Block) என்பது, ஆழ் குளிர் சாதனப் பெட்டிகளில் பதநீர் கொண்ட தக ரக் குவளைகளில் வைத்துக் குளிரவிடு வதன்மூலம் ஐஸ் கட்டியாக மாற்றமடை கிறது. இம்முறைமூலம் நீண்ட நாட்க ளுக்கு ஐஸ்கட்டிகளினைப் பாதுகாப்பது போல் பாதுகாத்து சேமித்துக் கொள்ள லாம். தமிழகத்தில் பதநீர் ஐஸ்கட்டியாக மாற்றப்பட்டு டெல்லிக்கு (2000 மைல் களுக்கு அப்பால்) குளிர்சாதனப் பெட்டி பூட்டிய புகைமிரதம்மூலம் கொண்டு செல்லப்பட்டு விற்பனை மேற்கொள்ளப் பட்டு வருகின்றது.

## கருப்பணிக் கஞ்சி

பதநீர் (கருப்பணி) பருவ கால த்தில் பெறப்படும் பதநீரிலிருந்து சுண் ணாம்பு நீக்கப்பட்டு பொன்நிறமாகக் காய் ச்சிய 3 போத்தல் பதநீரில் அரைப் படி பச்சையரிசி, 150 கிராம் வறுத்த பயிற்றம் பருப்பு இரண்டையும் கலந்து, அவித்த நிலையிலுள்ள சோற்றுடன் கலந்து. பின்பு பாதி தேங்காய்ப் பாலையும் சேர்த்து கொதி க்க வைத்து அளவான உப்பிட்டு இறக் கிப் பருகலாம்.

## கருப்பணிக் கூழ்

ஆறு போத்தல் பதநீரை (கருப் பணி) பொன்நிறமாகக் காய்ச்சி, சுண் ணாம்பை அடையவிட்டு பெறப்பட்ட தெளிந்த பதநீருடன், அரை கொத்து பச்சை அரிசியை மாவாக இடித்து அதில் 1/8 பங்கு பால் பேணி மாவை எடுத்து சேர்த்து குழைத்து, சிறு சிறு உருண் டைகளாகப் பிடித்து ஒரு(1) தேங்காய்ப் பாலில் மாவைக் கரைத்து, கொதிக்க வைத்த பொன்நிற பதநீரில் அரைத்த மாவை ஊற்றி துளாவி, பின்பு 1/4 இறா த்தல் வறுத்த பயறு அல்லது உழுந்து, பாதி இளந்தேங்காய் சொட்டுக்கள், மா உருண்டைகள் எல்லாவற்றையும் அத னுள் போட்டு கூழ் பருவம் வரும்வரை நன்றாக கொதிக்கவைத்து அளவான உப் பிட்டு இறக்கிப் பருகலாம். (முற்றும்)





யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட் டுறவுச் சங்கத்தின், தனது ஓய்வுபெற்ற உறுப்பினர்கள், பணியாளர்கள், தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள் ஆகி யோருக்கான பாராட்டு நிகழ்வும் கௌரவிப்பு நிகழ்வும் அண்மையில் நடைபெற்றபோது, பாராட்டுப் பெறுவோரை விருந்தினர்கள் கௌரவிப்பதையும், கலந்துகொண்டவர் களில் ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம்.



# தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை-2012

## பயிற்சி வினாத்தாள்-I

தொகுப்பு: செல்வி மதனரூபி-பாரதிதாசன் (ஆசிரியை)

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை முன்னிட்டு கற்பகத்தில் வெளிவந்துள்ள பயிற்சி வினாத்தாளுக்குரிய விடைகளை சுயமாக கண்டறிந்து பிறிதொரு தாளில் விடைகளை எழுதி இவ்வினாத்தாளுடன் இணைத்து அடுத்த மாதம் 10ம் திகதிக்கு முன் "ஆசிரியர், கற்பகம், வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், 52, சோமசுந்தரம் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். சரியான விடைஎழுதுபவர்களின் பெயர் விபரங்கள் கற்பகத்தில் பிரசுரிக்கப்படும்.

### பகுதி-1

❁ மிகவும் சரியான விடையின்கீழ் கீறிடுக.

01) "சுத்தம் சுகம் தரும்" என்பது முதுமொழியாகும். **சுத்தம்** என்பதன் ஒத்த கருத்துச் சொல் யாது?

i) அசுத்தம் ii) கறை iii) தூய்மை iV) மறு

02) தரம்-05 கணிதப் புத்தகத்தை விரிக்கும்போது இடது கைப்பக்கம் 104 ஆக இருந்தது. அடுத்த பக்கத்தை விரிக்கும்போது வலது கைப்பக்கம் இருக்கும் பக்க எண் யாது?

i) 105 ii) 106 iii) 107 iV) 108

03) தபால் பெட்டி ஒன்றுக்கு பூசக்கூடிய மிகப் பொருத்தமான வர்ணம் எது?

i) சிவப்பு ii) மஞ்சள் iii) ஊதா iV) வெள்ளை

04) சமச்சீர் உள்ள ஆங்கில எழுத்துக்கள் கொண்ட கூட்டம் எது?

i) A,E,H,O ii) L,O,V,W iii) M,H,V,O iV) N,M,F,D

05) 200இன் அரைவாசியின் 1/4 உடன் 5ஐக் கூட்டும்போது கிடைக்கும் எண் யாது?

i) 25 ii) 30 iii) 35 iv) 40

06) இன்று வெள்ளிக்கிழமை. நாளை மறுநாள் 28ம் திகதி ஆயின், சென்ற வெள்ளிக்கிழமை எத்தனையாம் திகதி?

i) 19 ii) 21 iii) 20 iV) 22

07) ஒரு சதுரக் காணியின் ஒரு பக்கத்தில் 6 தடிகள் நடப்பட்டுள்ளன. ஒரு தடியின் விலை ரூ. 100.00 எனில், இக்காணியைச் சுற்றி கம்புத் தடிகளை நடுவதற்கு எவ்வளவு செலவாகும்?

i) ரூ.2,400.00 ii) ரூ.2,000.00 iii) ரூ.2,200.00 iV) ரூ.1,800.00

08) கழுதை கத்தும் என்பதுபோல தேனீ.............?

i) கத்தும் ii) ரீங்காரம் செய்யும் iii) கரையும் iV) அலறும்

09) ஒருவர் சுயமாகச் செய்யும் சுயதொழிலைப் புரிபவர் யார்?

i) தாதியர் ii) மருத்துவர் iii) விவசாயி iV) விமானி

10) "மிகவும் வறியவர்" என்பதை விளக்கும் இன்னுமொரு இணைமொழி எது?

i) அருமைபெருமை ii) ஏழைஎளியவர் iii) இன்பதுன்பம் iV) அணைதுணை

### பகுதி-2

❁ பின்வரும் கவிதையை வாசித்து அது தொடர்பாகக் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

"டங் டங்" சத்தம் பார் ஆலையிலே
இரும்புருக்கி அடிக்கிறார் ஆலையிலே
மங்காத கலப்பை மண்வெட்டி
வழவாய் அமைக்கிறார் ஆலையிலே

பெரிய பாறை உடைக்கிறார்
பெருந்தெருக்கள் அமைக்கிறார்
உரியமுறையில் பாதையிலே
வாகனம் எத்தனை செல்லுது பார்

சேர்ந்து வேலை செய்திடுவோம்
சிறந்த பயனைப் பெற்றிடுவோம்
பார் பார் எங்கள் நாட்டினிலே
பாலும் தேனும் சுரக்குது பார்

01) கலப்பையும் மண்வெட்டியும் எங்கே செய்கிறார்கள்?

02) பாதையில் செல்லுவது யாது?

03) பாடலில் வந்துள்ள இரட்டைக் கிளவிச் சொல்லினை எழுதுக?

04) 'ஆலையிலே' என்பதன் கருத்து என்ன?

05) பாடலில் வந்துள்ள "பாறை" என்ற சொல்லுக்கு ஒத்த சொல் ஒன்று தருக?

06) "சேர்ந்து வேலை செய்திடுவோம் சிறந்த பயனைப் பெற்றிடுவோம்" என்ற கருத்தினை உணர்த்தும் பழமொழி ஒன்றினைத் தருக?

07) பாடலில் வந்துள்ள இணைமொழிச் சொல் ஒன்றினைத் தருக?

08) "வழி" என்பதற்கு பந்தியில் வந்துள்ள ஒத்த சொற்கள் 2 தருக?

**கீழே தரப்படும் சொற்களின் ஆங்கிலப் பதத்தை தருக?**

09) பாற்சோறு-..................... 10) வகுப்பாசிரியர்-.........................

**கீழ்வரும் ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்க் கருத்தினைத் தருக?**

11) Come here- 12) This is Pencil-


**கீழே தரப்படும் சிங்களச் சொற்களின் கருத்தை தமிழில் தருக?**

13) பாசல நிவாடுய்-..................... 14) வ(த்)துறதென்ன-.........................

**கீழே தரப்படும் தமிழ்ச் சொற்களின் கருத்தை சிங்களத்தில் தருக?**

15) வணக்கம்-..................... 16) உங்கள் பெயர் என்ன-.........................

**தரம்-9 மாணவர்களின் பொழுதுபோக்கு தொடர்பான தகவல்களை பின்வரும் வரைபடம் காட்டுகின்றது.**




17) வானொலி மட்டும் கேட்கும் மாணவர் யார்?

18) வானொலியையும், மூத்திரை சேகரித்தலையும் பொழுதுபோக்காகக் கொண்ட மாணவன் யார்?

19) பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல், முத்திரை சேகரித்தல் என்பவற்றை பொழுது போக்காகக் கொண்ட மாணவி யார்?

20) பத்திரிகை வாசித்தலை மட்டும் பொழுதுபோக்காகக் கொண்ட மாணவி யார்?

**பின்வரும் வினாக்களுக்கான சரியான விடையை எழுதுக.**

21) சமாதானத்தின் சின்னமாகக் கருதப்படுவது எது?

22) தேசிய கீதத்தை இயற்றியவர் யார்?

23) 9,240 உடன் 809ஐ கூட்டி, 355ஐக் கழித்தால் கிடைக்கும் தொகை யாது?

24) வடக்கு மாகாணத்தில் உள்ள மாவட்டங்களின் பெயர்களைத் தருக?

25) கணவனை இழந்த பெண்ணை எப்படி அழைப்பர்?

**கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும், பிழையாயின் (X) எனவும் அடையாளமிடுக.**

26) இன்று சாதாரண தபால் ஒன்றை அனுப்புவதற்கு ரூ.5.00 முத்திரையை ஒட்ட வேண்டும். (   )


27) வெண்புறா சமாதானத்தின் சின்னமாகக் கருதப்படுகின்றது. (   )

28) அடிப்படைத் தேவைகளில் மோட்டார் வண்டியும் ஒன்றாகும். (   )

29) மீன் பூவினால் சுவாசிக்கின்றது. (   )

30) தபாலதிபர் வைத்தியசாலையில் கடமையாற்றுகின்றார். (   )

**"நான் ஒரு மருத்துவரானால்......" எனும் தலைப்பில் 6 முழுமையான வாக்கியங்களை (எழுவாய், பயனிலை உட்பட நான்கு சொற்களேனும் இருத்தல் வேண்டும்) எழுதுக.**



# பனைகளை பாதுகாப்போம்

சி.எஸ்.யமுனானந்தா
(மருத்துவர் )

"பனையைத் தறிக்காதீர், பயனைக் குறைக்காதீர்" மேற்படி வாசகம் மூலம் மில்க்வைற் தொழிலதிபர் சிவதர்மவள்ளல் கனகராசா அவர்களால் யாழ்ப்பாண மண்ணில் இற்றைக்கு 30 வருடங்களுக்கு முன் அறிவூட்டப்பட்டது.

காலத்தின் தேவை கருதி அதனை நாம் இன்று மீள விழிப்பிற்கு இடல் வேண்டும். தமிழ் மக்களின் சமூக அடையாளமாகப் பனை மரங்கள் ஆதிகாலம் தொட்டு உள்ளன. வாழ்ந்த பாரம்பரிய மண்ணில் இயற்கையாகவே பனை மரங்கள் உறுதுணையாக இருந்துள்ளன. இதனைத் தமிழகம், இலங்கை, மடகஸ்கார் போன்ற நாடுகளில் காணலாம்.

போரின்போது எமது மண்ணில் பல பனைமரங்கள் அழிக்கப்பட்டன. அழிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. போர்முனையில், எம் மனையில், எம் மண்ணில் பெருமையைக்கூற தலையிழந்தும் தலை நிமிர்ந்தும் நிற்கின்றன எம் பனைகள். எனவே நம் பனையின் பயன்கள் பற்றி வலியுறுத்தப்பட வேண்டும்.

தால சாஸ்திரம் என்ற நூல் பனை மரத்தால் 801 பயன்கள் கிடைக்கின்றன என்று கூறுகின்றது. எத்தகைய நிலத்திலும் வளரும் தன்மையுடையது பனை. மழை பெய்யும் காலத்தில் கிடைக்கும் நீரையும் தன் வேர்களால் நிலத்திலிருந்து உறிஞ்சும் நீரையும் கொண்டே பனைமரம் வாழ்கிறது. இதற்கென நீர் பாய்ச்சுவதோ, உரமிடுவதோ, பூச்சி மருந்து தெளிப்பதோ கிடையாது. இவ்வாறு இயற்கை தரும் அற்புத மரத்தை கற்பகதரு என்றே அழைத்தார்கள்.

பனம்பழச் சாற்றை துணியில் பரப்பி வெய்யிலில் காயவிட்டு, துண்டுகளாக்கி பனாட்டு என்ற பெயரில் இனிப்புப் பண்டமாகச் சுவைத்திருக்கிறார்கள். தென்னையில் ஆண் மரம், பெண் மரம் என்று கிடையாது. பனையில் ஆண் பனை அலகுப் பனை என்றும், பெண் பனை பருவப் பனை என்றும் அழைக்கப்படுகிறது. பெண் பனையில் நுங்கு கிடைக்கிறது. இரண்டிலும் பதநீர் எடுக்க முடியும். ஆனால் பெண் பனையில் வரும் பாளையில் பதநீர் எடுத்தால் பின்பு நுங்கு கிடைக்காது, பனம் பழம் கிடைக்காது, பனை விதை கிடைக்காது.

பனங்கொட்டை மண்ணில் விதைக்கப்பட்டு கிழங்காகிறது. கிழங்கை எடுக்காமல் அப்படியே விட்டு விட்டால் பனை மரமாகி விடுகிறது. எனவே பெண் பனைகளைவிட ஆண் பனைகளில் பதநீர் எடுப்பதே நல்லது.

பதநீர் உடலுக்கு நலம் தருவது, பலம் தருவது. இரவு முதல் அதிகாலை வரை விண்மீன்களும் நிலாக் கதிர்களும் ஒளி பாய்ச்சுகின்றன. காலை முதல் ஞாயிறு தன் கதிர்களால் குளிப்பாட்டுகிறது. தொழிலாளி பாளையைச் சீவி சுரக்கும் நீரில், கடல் வயிற்றுச் சிப்பியின் சுண்ணாம்பும் சேர்த்து பதப்படுத்துகிறது.

இந்தப் பதநீரைக் குடித்தால், உடல் வெப்பமடையும் நேரத்தில் குளிர்ச்சியூட்டுகிறது. உடல் குளிர்ச்சியாய் இருந்தால் வெப்பமூட்டுகிறது. நரம்பும் தசையும் பழுதடைந்தால் இதயத்தின் செயற்பாடு முடங்கிப் போகும். இவ்வாறு நிகழ்ந்துவிடாமல் பதநீரிலுள்ள கல்சியம் பாதுகாக்கிறது. பல்லும் எலும்பும் பதநீரால் உறுதிப்படுத்தப்படுகின்றன. பதநீரில் இருக்கும் இரும்புச் சத்து நரம்புத் தொகுதிக்கு செயலூக்கத்தை அளிப்பதோடு, நோய் எதிர்ப்பு சக்தியையும் கொடுக்கிறது.

பதநீரிலிருக்கும் தயமின் என்ற உயிர்ச் சக்தி மூளையைச் சுறுசுறுப்பாகச் செயற்பட வைக்கிறது. இரத்த ஓட்டத்தைச் சீராக்குகிறது. பதநீரில் இருக்கும் நியாசின் என்னும் மூலக்கூறு மனத்தடுமாற்றம் வராமலும், வாய்ப்புண் வராமலும் காக்கிறது. இப்போது குளிர்பானம் மற்றும் சோடாவுக்குப் பதிலாக கடைகளிலெல்லாம் பதநீர் கிடைக்க வேண்டும். குறிப்பாக 30 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு பதநீர் மிகவும் அவசியமான பானமாகும். இது பிற்காலத்தில் என்புருக்கி நோய் வராமல் தடுக்க வல்லது.

மண்ணில் எந்தவித முதலீடும் இல்லாமல், பராமரிப்பும் இல்லாமல் உரமிடுதல், நீர் பாய்ச்சல் என்று செலவே இல்லாமல் வளர்ந்து நிற்கும் மரங்களிலிருந்து இத்தனை நலன்களைத் தரும் பதநீரை நாம் எடுக்கிறோமா? எடுக்காமல் இருப்பது மடமை அல்லவா?

பனையைச் சார்ந்த காகமும் அமுதுண்ணும் என்ற பழமொழியே உண்டு. பதநீரைக் கூழாக்கி சிரட்டையில் ஊற்றி எடுப்பதைக் கருப்பட்டி, கற்பகக்கட்டி என்கிறோம். பதநீரைப் பக்குவமாகக் காய்ச்சிக் கூழாக்கி சில நாட்களில் படிக வளர்ச்சிப்படி கற்கண்டாகத் தயாரிக்கலாம். இவையனைத்தும் அருமையான சக்தி படைத்தவை.

பருவமடைந்த மரங்களில் மட்டுமே தொழிலாளர்கள் ஏறி, இறங்கிப் பயனைக் கொண்டு வருகிறார்கள். பருவமடைந்துவிட்டோம், பதநீரும் நுங்கும் தருவதற்கு நாங்கள் தயாராக இருந்தும் எங்களைப் பயன்படுத்துவாரில்லையே! உலக மக்களுக்கு நாங்கள் உதவமுடியவில்லையே என்று ஓலைக்கரங்களால் தங்கள் தலைகளில் அடித்துக்கொண்டு அழுது அரற்றும் மரங்கள்.

ஒரு பனை மரத்தைச் சரியாகப் பயன்படுத்தினால் ரூபா 10,000 வருட வருமானம் கிடைக்கும்.

([illegible]ம் பக்கம் பார்க்க)

# துளிக் கவிதைகள்!

தே.யோ.தவராஜா

**பணம்**
தூணிலும் இருக்கும்
துரும்பிலும் இருக்கும்
கலியுகத்துக் கடவுள்!

**பிணம்**
பிச்சைக்காரனோ
பில்கெட்சோ
தப்பாமல் ஒருநாள்
டுெக்கப்போகும் அவதாரம்

**பதவி**
கல்வியைத் தேடியவர்களுக்கு
கல்வி தேடிக் கொடுத்த
கைமாறு..!

**மது**
தேடிச்சென்று
[illegible]டிவரும்
தேவையற்ற பிரச்சினை!
நாடிச் செல்வோர்
நற்பெயரை
நக்கியே நாசப்படுத்தும்
நாய்க்குட்டி!

**மாது**
மனித இனம் வாழ
கடவுள் தந்த வரம்!
மனித குலம் சாக
இறைவன் இட்ட சாபம்!

**சீதனம்**
வரட்டுக் கௌரவத்தின்
முகமூடி!
அடிமை வாழ்விற்கான
அச்சவாரம்!!

**சிகரட்**
புகைத்தலே இன்பம் என
புரளி கிளப்புவோர்
அறிமுகம் செய்துவைத்த
அரளி விதை!

**நீலப்படம்**
குருட்டுப் பணத்துக்காக
இருட்டு உறவுகளை
திருட்டுப் படம் டுெக்கும்
வரட்டுப் பிசாசுகளின்
வக்கிரப் பிரசவங்கள்!

**மனிதமூளை**
கணினியைக்
கண்டுபிடித்த
கணினி!

**கணினி**
மனித மூளையை
சலவை செய்து
மீள் நிரப்பு செய்யவல்ல
வலை அமைப்பு!
அல்லது
இலத்திரனியல் உலகு தந்த
ஆலாவுதீனின்
அற்புத விளக்கு!!

**பிச்சைக்காரன்**
இன்றைய பிச்சைக்காரன்
நேற்றைய பில்கேட்ஸ்
நாளைய அம்பானி
எப்போதும் டாடா பிர்லா!

**பணக்காரன்**
தன் கல்லாப் பெட்டியை
நிரப்புவதற்காய்
மனைசக் கல்லாக்கிக் கொள்ளும்
கசாப்புக் கடைக்காரன்

# புலம்பெயர்ந்த புத்திரனே!

கரு அறையில் காத்திருந்து
கால் பதித்த தன் மகனை
ஊர் அறியச் செய்வதற்கு
உவகையுடன் பலவும்
கொடுத்த தந்தை!

உதிரத்தைப் பாலாக்கி
உணவாகத் தானளித்து
உன் உடலைக் காப்பதற்கு
தன் உணவைத்தான்
ஒறுத்த தாய்!

பார் தனிலே பலம் பெற்று
பலத்தோடு வாழ்வதற்கு
புலம்பெயர அனுப்பி வைக்க
தரம் கெட்ட தன்னலத்தால்
தாய் தந்தை இருவரையும்
தவிக்கவிட்ட செயல் உந்தன்
தலைமுறைக்கு ஆகிடுமோ!

*இ.காந்தன்-கோப்பாய்*

## பனை மரங்களை........ 6ம் பக்கத் தொடர்ச்சி

நமக்கு முந்தைய தலைமுறை செய்த இந்த அற்புதப் பணியை நாமும் செய்ய முடியும் என்ற நம்பிக்கையோடு புதியவர்களை உடல் உழைப்பாலேயே மரங்களில் ஏறிப் பயன்பெற ஒருபுறம் பயிற்சி அளிக்க வேண்டும்.

இன்னொருபுறம் பனை ஏறக் கருவி ஒன்று மிக அவசரமாகக் காண வேண்டும். கனமற்ற-ஆனால் உறுதியான உலோகத்தினால் இதனைச் செய்ய வேண்டும். ஒருவர் தூக்கிச் செல்லும் எடைதான் இருக்க வேண்டும். சக்கரங்கபை பொருத்தி பனந்தோப்பில் இழுத்துச் செல்லும் வகையிலும் அமைக்கலாம்.

மிக எளிதில் பொருத்திப் பயன்படுத்திக் கழற்றி அடுத்த மரத்துக்கு எடுத்துச் செல்லும் வகையில் ஒரு கருவியை நம்மால் செய்யமுடியும் என்று தொழில்நுட்ப வல்லுநர்கள் இதை ஒரு சவாலாக ஏற்க வேண்டும். இத்தகைய கருவிகள் பரவலாகச் செய்யப்பட்டால் பலர் பயிற்சிபெற வருவதுடன். மக்கள் பனை மரங்கள்மூலம் பயன் பலவும் பெறுவர்.

இறுதியாக செம்பனையும், செம்மஞ்சள் பின்னணியும் 21ம் நூற்றாண்டின் தமிழின எழுச்சிக்கான புரட்சிக் கொடியாக அமையும். இது செம்பிறை, செஞ்சிலுவை, செவ்வரிவாள், செந்நட்சத்திரம் போல சமூகப் புரட்சிக்கான தமிழரின் கொடியாக அமையும்.

பனை வளத்தைப் பேணிப் பாதுகாக்க நாம் ஐந்து அம்ச நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அவையாவன,

✳ அரசியல் அர்ப்பணிப்பு, அதாவது அரச உதவி பனை மீள் நடுகைக்கு அவசியம்.

✳ விவசாயத் திணைக்களம், விவசாய பீடங்கள் இணைந்து, பனை நடுகை, ஆராய்ச்சிகளில் ஈடுபட வேண்டும்.

✳ பனம் பொருட்கள் சந்தைப் படுத்தும் தன்மையினை பனை அபிவிருத்திச் சபை நவீன தொழில்நுட்ப உதவியுடன் செய்தல் வேண்டும்.

✳ பனைமரப் பாதுகாப்பினையும், தரிசு நிலங்களில் பனை மரங்களை உருவாக்கலையும் பிரதேச சபைகள் ஊக்குவிக்க வேண்டும்.

✳ பனைமரம் தொடர்பான புள்ளிவிபரங்களையும், அவற்றின் பாதுகாப்பினையும் பிரதேச செயலகங்கள்மூலம் பேண வேண்டும்.

## சமாசத்... 1ம் பக்கத் தொடர்ச்சி

தெல்லிப்பளைச் சங்கத்தைச் சேர்ந்த 29 அங்கத்தவர்களுக்கு 19 ஆயிரத்து 482 ரூபாவும், சங்கானை சங்கத்தைச் சேர்ந்த 28 அங்கத்தவர்களுக்கு 23 ஆயிரத்து 702 ரூபாவும், பண்டத்தரிப்பு சங்கத்தைச் சேர்ந்த 24 அங்கத்தவர்களுக்கு 21 ஆயிரத்து 578 ரூபாவும், சாவகச்சேரி சங்கத்தைச் சேர்ந்த 51 உறுப்பினர்களுக்கு 52 ஆயிரத்து 903 ரூபாவும், அச்சுவேலி சங்கத்தைச் சேர்ந்த 333 உறுப்பினர்களுக்கு 40 ஆயிரத்து 961 ரூபாவும், பருத்தித்துறைச் சங்கத்தைச் சேர்ந்த 26 உறுப்பினர்களுக்கு 20 ஆயிரத்து 86 ரூபாவும், அரியாலை சங்கத்தைச் சேர்ந்த 10 உறுப்பினர்களுக்கு 11ஆயிரத்து 561 ரூபாவும், கொடிகாமம் சங்கத்தைச் சேர்ந்த 19 உறுப்பினர்களுக்கு 13 ஆயிரத்து 180 ரூபாவும், மானிப்பாய் சங்கத்தைச் சேர்ந்த 20 உறுப்பினர்களுக்கு 15 ஆயிரத்து 542 ரூபாவும், ஊர்காவற்றுறை சங்கத்தைச் சேர்ந்த 18 உறுப்பினர்களுக்கு 24 ஆயிரத்து 48 ரூபாவும், வேலணை சங்கத்தைச் சேர்ந்த 16 உறுப்பினர்களுக்கு 9ஆயிரத்து 236 ரூபாவும், கோண்டாவில் சங்கத்தைச் சேர்ந்த 32 அங்கத்தவர்களுக்கு 25 ஆயிரத்து 970 ரூபாவும், கரவெட்டிச் சங்கத்தைச் சேர்ந்த 30 உறுப்பினர்களுக்கு 18 ஆயிரத்து 545 ரூபாவும், யாழ்ப்பாணம் சங்கத்தைச் சேர்ந்த 12 உறுப்பினர்களுக்கு 19ஆயிரத்து 363 ரூபாவும், காரைநகர் சங்கத்தைச் சேர்ந்த 13 அங்கத்தவர்கள்ஞ்கு 6 ஆயிரத்து 858 ரூபாவும், கோப்பாய் சங்கத்தைச் சேர்ந்த 23 அங்கத்தவர்களுக்கு 36ஆயிரத்து 999 ரூபாவும் ஓய்வூதியமாக வழங்கப்பட்டது.

## கௌரவிப்பும் புலமைப்பரிசில் வழங்கலும்

பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் ஓய்வுபெற்ற, சிறந்த அங்கத்தவர், பணியாளர்கள், வெற்றியாளர்கள் கௌரவிப்பும் மாணவர் புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வும் கடந்த 14ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை சங்கத் தலைமைக் காரியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

சங்கத் தலைவர் தி.இந்திரசித்து தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு வீ.கே.அருந்தவநாதன் பிரதம விருந்தினராகவும், மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் திரு இ.பாலச்சந்திரன், பெரியவிளான் றோ.க.த.க.பாடசாலை அதிபர் திரு.திருமதி யூ.ம.கொ.பீ.பியன் வெனு, சாந்தை சிற்றம்பலம் வித்தியாலய அதிபர் திரு வை.பிறேமதாஸ், யாழ்.கலால் பகுதிப் பொறுப்பதிகாரி திரு.த.நந்தகுமார் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும், வடமாகாண ப.தெ.வ.அ.கூ.ச. சமாச தலைவர் திரு நா.கணேசன், வலிகாமம் ப.தெ.வ.அ.கூ.ச.கொத்தணி தலைவர் திரு செ.செல்வராசா, தலைமைக்காரியாலய கூட்டுறவுப் பரிசோதகர் திரு இ.விஜயமோகனராசா, கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் திரு த.தவமன்னன் மற்றும் சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் ஓய்வுபெற்ற அங்கத்தவர், பணியாளர், சிறந்த அங்கத்தவர், பணியாளர், பதநீர் உற்பத்தியில் ஈடுபட்ட அங்கத்தவர், முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கல், விளையாட்டு, ஏனைய துறைகளில் பங்குபற்றியவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

## பாராட்.... 1ம் பக்கத் தொடர்ச்சி

கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு இ.பாலச்சந்திரன், தலைமைக் காரியாலய கூட்டுறவுப் பரிசோதகர் திரு இ.விஜயமோகனராஜா, கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு பொ.மகேஸ்வரன், சமாசத் தலைவர் திரு நா.கணேஸ், பொதுமுகாமையாளர் திரு வ.சிவகுமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.


எமது உறுப்பினர்கள், பணியாளர்கள், மகளிர் மற்றும் முன்பள்ளி மாணவர்கள் ஆகியோருக்கான பல்வேறு நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருவதுடன், சமூக, பொருளாதார அபிவிருத்தி நோக்கிய செயற்பாட்டிலும் முன்நோக்கி செல்கின்றோம்.

**அங்கத்தவர் நலத்திட்டம்**
- மாதாந்த ஓய்வூதியம் வழங்குதல்
- விபத்து மரணக்கொடை வழங்கல்.
- சிறந்த, ஓய்வுபெற்றோர் கௌரவிப்பு
- கூட்டுறவு பயிற்சிகள் வழங்குதல்.

**பணியாளர் நலத்திட்டம்**
- மாதாந்த ஓய்வூதியம் வழங்குதல்.
- சிறந்த, ஓய்வுபெற்றோர் கௌரவிப்பு
- கூட்டுறவு பயிற்சிகள் வழங்குதல்.

**மகளிர் உறுப்பினர் நலத்திட்டம்**
- தையல், மனைப் பொருளியல், அழகுக்கலை, சுயதொழில்முயற்சி பயிற்சிகள் வழங்கல்.

**கிராமிய வங்கிச் சேவை**
- உறுப்பினர், பணியாளர்களுக்கான கடன் வழங்கல்.
- நிலையான வைப்புக்கான கடன் வழங்கல்.
- சிறுவர் சேமிப்பாளரை ஊக்குவித்தல்.
- ஓய்வூதிய கொடைகள் வழங்கல்.

**உற்பத்தி செயற்பாடுகள்**
- போத்தற்கள் உற்பத்தி, விற்பனை.
- பனைவெல்லம், பதநீர் உற்பத்தி, விற்பனை.
- கல்லாக்காரம் உற்பத்தி,விற்பனை
- பனைசார் உணவுகள் உற்பத்தி, விற்பனை.

**ஏனைய செயற்பாடுகள்**
- நிழற்படப் பிரதியிடல்.
- பிளாஸ்ரிக் கதிரை வாடகை.
- லான்ட் மாஸ்ரர் வாடகை.

**சமூக மேம்பாட்டு திட்டங்கள்**
- முன்பள்ளிகளை நடத்தி, அதன் ஆ[illegible]யர்களுக்கு வேதனமும், விளையாட்டுப் போட்டிகளுக்கு அன்பளிப்பும் வழங்கல்.
- கூட்டுறவுதினவிழா போட்டிகளை நடத்தி பரிசில்கள் வழங்கல்.
- இலவச கண்பரிசோதனையும் மூக்குக் கண்ணாடி வழங்கலும்.

**அங்கத்தவர், பணியாளரின் பிள்ளைகளுக்கானது**
- புலமைப்பரிசில், O/L, A/L பிரிவுகளுக்கான கல்விக்கொடை.
- சுழற்சி முறையில் கிராமிய வங்கியில் நிதி வைப்புச் செய்தல்.
- பாடசாலை உபகரணம் வழங்கல்.
- மாலைநேர வகுப்புக்கள் நடத்துதல்.

**எதிர்கால திட்டங்கள்**
- பனைசார் உணவகம் நடத்துதல்
- கட்டடப்பொருள் விற்.நிலையம்
- ஹயர் வாகன வாடகைசேவை

# கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

கே.கே.எஸ்.வீதி,
தாவடிச் சந்தி,கோண்டாவில்

தொலைபேசி:-
021 222 3539


இப்பத்திரிகை சமாசப் பதிப்பகத்தினால் அச்சிடப்பட்டு, இல.52, சோமசுந்தரம் லேன், சுண்டுக்குளியில் உள்ள வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் 2012ம் ஆண்டு பெப்ரவரி மாதம் வெளியிடப்பட்டது.